மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தைக் கருத்திற்கொண்டுதான், ஆற்றில் எங்கெங்கு படுக்கை அணைகள் கட்டப்பட வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக அரசு ஆய்ந்துவருகிறது. அந்த ஆய்வு முடிந்த பிறகு அந்த அணைகள் கட்டப்படும்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம்

162—(*வினா எண். 163) திரு. கே. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம் (Steam Laundry) அமைக்க அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் திரு. க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:

தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு ஆகஸ்டு மாத இறுதிக்குள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நீராவி சலவை இயந்திரத்தை அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு அனுமதியளித்து எவ்வளவு காலம் இது நிறைவேற்றப்படாமல் இருந்து வந்திருக்கிறது. அப்படி நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே சலவை செய்யவேண்டிய நோயாளிகளுடைய துணிகள் சலவை செய்ய முடியாமல் அழுக்குத் தண்ணீரில் சலவை செய்து வந்ததை மோசமாக இருக்கிறது என்று டாக்டர்கள் ரிப்போர்ட் செய்ததால் அங்கே பக்கத்தில் இருக்கும்படியான ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் சலவை செய்து வந்தார்களே, அது நிறுத்தப்பட்டது உண்மையா? அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1986-ல் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 33.13 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒரு நீராவி சலவை இயந்திரத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இயந்திரங்கள் வாங்கு

1989 ஏப்ரல் 29]

வதற்கு இந்தத் தொகை போதுமானதாக இல்லாத காரணத்தால் மேலும் அரசாணை எண். 367 மூலமாக இயந்திரங்கள் வாங்குவதற்கு ஐந்து லட்சம் ரூபாயை கூடுதலாக செலவிட அனுமதி வழங்கப்பட்டது. கட்டட வேலையைப் பொறுத்தவரையில் முழுவதுமாக முடிவு பெற்றுவிட்டது. மூன்று வாஷிங் மெஷின்கள், மூன்று ஹைட்ரோ எக்ஸ்ட்ராக்டர்ஸ், இரண்டு பாய்லர்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டு விட்டன. இரண்டு ஸ்ட்ரைலசர் மெஷின்கள் மே மாத இறுதிக்குள் வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இதற்குத் தேவையான இயந்திரங்களான Dyi g tumble, Calei.eri g Machine, Pressi g Machine இவைகளுக்கான ஆணை வழங்கப்பட்டு தளவாடங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகள் அனைத்தும் வந்தவுடன் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அதனுடைய பணிகள் முடிவடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு காலம், சென்ற அரசாங்கம் இருந்தபோது இந்த இயந்திரத்தை அங்கே ஸ்தாபிப்பதற்காக இதே மன்றத்தில் நான் தொடர்ந்து வாதாடியவன். இத்தனை காலம் கிடப்பில் போட்டுவிட்டது ஒரு மிகப்பெரிய தவறான நடவடிக்கை. இப்போதாவது ஆகஸ்ட் மாதத்திற்குள்-அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், இவ்வளவு இயந்திரங்கள் பாக்கியிருப்பதை வாங்கி இங்கே ஸ்தாபிதம் செய்து வேலை துவங்கப்படுமா ? அப்படித் துவங்கினால் அந்த இயந்திரத்தின் கெபாசிடி என்ன ? எவ்வளவு ஆயிரம் துணிகளை அது ஒரு நாளைக்கு சுத்தப்படுத்திக் கொடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நேற்று பதில் அளிக்கும் போது தமிழகத்தில் பல்வேறு கட்டடங்கள், பல்வேறு மருத்துவ மனைகள் எல்லாம் கட்டப்பட்டும் கூட திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அவைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும், திறந்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மருத்துவத் துறை இயக்குநரிடம்கூட தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இதுபோன்று கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்காமல் இருக்கிறது என்பதையும், எந்தெந்த இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனஎன்பதையும் ஒருஅறிக்கையாகக்கூட கேட்டிருக்கிறேன். ஆகஸ்ட் மாதத்திற்குள் இது திறக்கப்படும். அங்கே வருகிற அனைத்துக் துணிகளையும் சலவை செய்யக்கூடிய தன்மை பொருந்தியதாக இந்தச் சலவை நிலையம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.